# கத்தார் பிரதமருடன் பாரத பிரதமரின் சந்திப்பு

பிப்ரவரி 14, 2024

1. பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இன்று கத்தார் தலைநகர் தோஹாவில் தனது முதல் சந்திப்பில் கத்தார் பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான மேதகு. ஷேக் முகமது பின் அப்துல்ரஹ்மான் அல் தானி அவர்களை சந்தித்தார்.

2. இந்த சந்திப்பில் வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, நிதி மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து இரு தலைவர்களும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். பின்னர் அவர்கள் மேற்கு ஆசியாவில் அண்மையில் இடம்பெற்ற பிராந்திய முன்னேற்றங்கள் குறித்தும் விவாதித்தனர். மேலும் பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

3. அதன்பின், கத்தார் பிரதமரின் மரியாதைக்குரிய இரவு உணவு விருந்தில் பாரத பிரதமர் கலந்து கொண்டார்.

**தோஹா**
**பிப்ரவரி 14, 2024**